**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்தியாவில் அதிகரிக்கும் ஜேஎன்.1 பாதிப்பு; 2,669 பேருக்கு கரோனா சிகிச்சை - உஷார் நிலையில் மாநிலங்கள்



ACADEMY

**புதுடெல்லி:** கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் புதிதாக 358 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, நாடு முழுவதும் கரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருபவர்களின் மொத்த எண்ணிக்கை 2,669 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

சுகாதாரத்துறையின் தகவலின்படி, கடந்த 24 மணி நேரத்தில் கரோனா தொற்றால், கேரளாவில் 3 பேர், கர்நாடகாவில் 2 பேர், பஞ்சாப்பில் 1 என மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி, இதுவரை தொற்று பாதிப்பால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5,33,327 ஆக அதிகரித்துள்ளது. நாட்டின் தொற்று பாதிப்பில் இருந்து மீண்டவர்களின் சதவீதம் 98.81 ஆக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கேரளாவில் 79 வயது மூதாட்டி ஒருவருக்கு உருமாறிய ஜேஎன்.1 வகை கரோனா தொற்று கடந்த சிலநாட்களுக்கு முன் கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் மகாராஷ்டிராவில் ஒருவரிடமும் கோவாவில் 19 பேரிடமும் கண்டறியப்பட்டுள்ளது. சிங்கப்பூர் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் கரோனா தொற்று பரவுவதற்கு புதிய ஜேஎன்.1 வகை திரிபே காரணமாக கூறப்படுகிறது.

**சுகாதாரத்துறை கூட்டம்:** கரோனா தொற்று மீண்டும் பரவி வருவதை கருத்தில்கொண்டு மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக்மாண்டவியா தலைமையில் டெல்லியில் புதன்கிழமை உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்குப் பின்னர் அமைச்சர் மாண்டவியா கூறுகையில், "மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆனால் பீதியடையத் தேவையில்லை. நமது தயார்நிலையில் எவ்வித தளர்வும் இல்லை. பொது சுகாதாரம் என்று வரும்போது எவ்வித அரசியலுக்கும் இடமில்லை. கரோனா தொற்றால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு மத்திய அரசு முழு உதவிகள் அளிக்கும். பாதிக்கப்பட்ட மாநிலங்கள் தயார்நிலையை உறுதி செய்ய ஒவ்வொரு மருத்துவமனையிலும் 3 மாதத்துக்கு ஒரு முறை கரோனா தடுப்பு ஒத்திகை நடத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்தநிலையில், ஜெஎன்.1 புதிய வகை வைரஸால் 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றாலும் அச்சப்படத் தேவையில்லை என்று நிதி ஆயோக் (சுகாதாரம்) உறுப்பினர் டாக்டர் வி.கே. பால் புதன்கிழமை தெரிவித்தார். மேலும் அவர், "புதிய பாதிப்புக்கு தற்போது நடைமுறையில் இருக்கும் சிகிச்சைகளே போதுமானது. இந்த பாதிப்பு மென்மையானதே. அதே நேரத்தில் அனைத்து வைரஸ்களும் மாறுபாடு அடைகிறது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் உள்ள அறிவியல் அமைப்புகள் புதிய மாறுபாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. மாநிலங்கள் சோதனைகளையும் கண்காணிப்பையும் அதிகரிக்க வேண்டும். தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 91 முதல் 92 சதவீதம் பேர் வீட்டில் இருந்தே சிகிச்சை பெற்று வரவே விரும்புகின்றனர்" என்று தெரிவித்தார்.

புதிய கரோனா வைரஸ் பாதிப்புகள் அதிகரித்து வரும் நிலையில் பல மாநிலங்கள் முழு அளவில் தயாராகி வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி, இன்ப்ளூயன்சா நோய் மற்றும் சுவாச தொற்று நோய்களுக்கான சோதனைகள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்படும் என்று மேற்கு வங்க சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குஜராத் சுகாதாரத்துறை அமைச்சர் ருஷிகேஷ் பாடீல், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் அச்சப்படத் தேவையில்லை என்று வலியுறுத்தினார். மேலும் மாநிலத்தில் 13 பேர் புதிதாக தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். டெல்லி சுகாதாரத்துறை அமைச்சர், சவுரப் பரத்வாஜ்,"இந்த சிக்கலை சமாளிக்க நிர்வாகம் முற்றிலும் தயார் நிலையில் உள்ளது. வைரஸ் மாறுபாடுகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், வெண்டிலேட்டர்கள் மற்றும் பிற தேவைகள் குறித்து மீண்டும் ஆய்வு செய்யப்படுகின்றன என்று புதன்கிழமை தெரிவித்தார்

## நமோ செயலி மூலம் மக்கள் மனம் அறிந்து குறைகளை களைய தயாராகும் மத்திய அரசு



**புதுடெல்லி:** மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மக்களின் மனதை அறிவதற்காக நமோ செயலி மூலம் பாஜக கணக்கெடுப்பு நடத்த உள்ளது. இதன் மூலம் மக்களின் குறைகளை களைய மத்திய அரசும் தயாராகி வருகிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல், மக்களவைத் தேர்தலுக்கான அரையிறுதிப் போட்டியாகக் கருதப்படுகிறது. இதில், முக்கிய மூன்று மாநிலங்களாக மத்தியபிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தானில் பாஜக

வென்றுள்ளது. இதனால், இதே வேகத்தில் மக்களவைத் தேர்தலையும் சந்தித்தால், வெற்றிபெறுவது எளிது என பாஜககருதுகிறது. இதில், பொதுமக்களின் மனதை அறிய ஏற்கெனவே உள்ள நமோ செயலியை பாஜகபயன்படுத்த உள்ளது. இதன்மூலம், 'ஜன் மன் சர்வே (மக்கள் மனதின் கணக்கெடுப்பு)' எனும் கணக்கெடுப்பு நடத்த உள்ளது.

"நமோ செயலியை பயன்படுத்தி இந்தியாவை மாற்றி அமைக்கலாம், வாருங்கள்" என நமோ செயலியின் ஒருங்கிணைப்பாளர் குல்ஜித் சஹால் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இந்த செயலியில் மத்திய அரசு பற்றிய பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு பொதுமக்களிடம் அதற்கான விடைகள் கேட்கப்பட உள்ளன. இத்துடன், மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவிடும் வசதியும் இதில் செய்யப்படுகிறது. இதில் பதிவாகும் புகார்களை மத்திய அரசு உடனுக்குடன் சரிசெய்து, மக்கள் மனதை வெல்ல பாஜக தயாராகிறது.

பிரதமர் நரேந்திர மோடி பெயரிலான நமோ செயலி, கடந்த 2015-ல் அறிமுகமானது. இந்த செயலியில் பிரதமர் மோடியின் அன்றாட நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள், படக்காட்சிகளுடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது. பிரதமர் மோடியின் 'மனதின் குரல்' வானொலி உரைகளையும் இதில் கேட்க முடியும்.

நாடு முழுவதிலும் உள்ள தனதுகட்சி எம்பிக்களின் செயல்பாடுகள் குறித்தும் இந்த கணக்கெடுப்பில் பாஜக கருத்து கேட்க உள்ளது. இதன் அடிப்படையில் எம்.பி.க்களுக்கு மறுவாய்ப்பு அளிப்பது குறித்து பாஜக யோசிக்கும் என தகவல்கள் வெளியாகின்றன.

பொதுமக்களிடம் இதுபோல் கருத்து கேட்க தனியார் நிறுவனங்களையே அரசியல் கட்சிகள் நாடி வருகின்றன. இந்த வழக்கத்தை மாற்றி பாஜக இம்முறை நேரடியாக பொதுமக்களிடம் கருத்து கேட்கிறது. இந்த செயலியை மேலும் பல லட்சம் மக்கள் தங்கள்

கைப்பேசிகளில் பதிவிறக்கம் செய்ய பல்வேறு பரிசுத் திட்டங்களை அமலாக்கும் யோசனையும் பாஜகவிடம் உள்ளதாகத் தெரிகிறது.

## குற்றவியல் சட்ட மசோதா மக்களவையில் நிறைவேற்றம்: நன்கு சரிபார்த்ததாக அமித் ஷா தகவல்



மக்களவையில் நேற்று குற்றவியல் மசோதாக்கள் மீதான விவாதத்தில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.படம்: பிடிஐ

**புதுடெல்லி:** பழைய குற்றவியல் சட்டங்களை மறுசீரமைக்கும் விதமாக மத்திய அரசு புதிதாக கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்ட மசோதாக்களும் மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.

பழைய காலனித்துவ கால இந்திய தண்டனைச் சட்டங்களை மாற்றும் வகையிலும், நவீன காலத்துக்கு ஏற்ற வகையிலும் மத்திய அரசு 3 புதிய குற்றவியல் மசோதாக்களை உருவாக்கியுள்ளது. அதன்படி, பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷாசன்ஹிதா, பாரதிய சாக்ஷியா ஆகிய 3 மசோதாக்களையும் மக்களவையில் மத்திய உள்துறைஅமைச்சர் அமித் ஷா கடந்த 12-ம்தேதி அறிமுகம் செய்தார். இதன் மீதான விவாதம் மக்களவையில் நேற்று நடந்தது. அப்போது, அமித் ஷா பேசியதாவது:

**158 ஆலோசனை கூட்டங்கள்:** புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக இதுவரை 158 ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தனிப்பட்ட முறையில் புதியகுற்றவியல் சட்டத்தின் ஒவ்வொரு புள்ளி, கமாவையும் நான் சரிபார்த்துள்ளேன். புதிய சட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் விரிவாக அலசி

ஆராயப்பட்டு சரிபார்க்கப்பட்டுள்ளன. அவை, நமது அரசியல் அமைப்பின் உணர்வோடு முழுமையாக பொருந்திப் போகின்றன.

இந்த புதிய மூன்று குற்றவியல் சட்ட மசோதாக்கள் காலனித்துவ இந்திய தண்டனைச் சட்டத்துக்கு சரியான மாற்றாக அமையும் என்பதுடன், இந்தியத் தன்மை, அரசியலமைப்பு, மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இதையடுத்து, மக்களவையில்3 புதிய குற்றவியல் மசோதாக்களும் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன. நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சிகளை சேர்ந்த 140-க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் மத்திய அரசு இந்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டை பின்னுக்குத் தள்ளி 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக உருவெடுத்த உ.பி.



**லக்னோ:** உள்நாட்டு மொத்த உற்பத்தி (ஜிடிபி) பங்களிப்பு அடிப்படையில் மகாராஷ்டிரா முதல் இடத்திலும் தமிழ்நாடு 2-வது இடத்திலும் இருந்து வந்தன. உத்தர பிரதேசம் 5-வது இடத்தில் இருந்தது.

இந்நிலையில், தற்போது தமிழ்நாட்டை பின்னுக்குத் தள்ளி உத்தர பிரதேசம் 2-வது இடத்துக்கு நகர்ந்துள்ளது. முதலீடு மற்றும் பங்குச் சந்தை தொடர்பான போக்குகளை கண்காணித்து வரும் soic.in ஜிடிபி பங்களிப்பு அடிப்படையில்

இந்திய மாநிலங்களை பட்டியலிட்டுள்ளது. அதன்படி, 15.7% ஜிடிபி பங்களிப்பைக் கொண்டு மகாராஷ்டிரா முதல் இடத்திலும் 9.2% பங்களிப்பைக் கொண்டு உத்தர பிரதேசம் 2-வது இடத்திலும் உள்ளன. தமிழ்நாடு (9.1%), குஜராத் (8.2%), மேற்கு வங்கம் (7.5%) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத், 2027-ம் ஆண்டுக்குள் அம்மாநில பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலராக மாற்ற இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறார்.

முதலீடுகளை ஈர்ப்பதற்காக, தொழில் கொள்கையில் பல்வேறு தளர்வுகளை கொண்டுவந்தபடி உள்ளார். இந்நிலையில், தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலங்களின் பட்டியலில் 14-வது இடத்திலிருந்த உத்தர பிரதேசம் தற்போது 2-வது இடத்துக்கு முன்னேறியுள்ளதாக அம்மாநில அரசு செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு பிப்ரவரி மாதம் உத்தர பிரதேசத்தில் உலக முதலீட்டாளர் உச்சி மாநாடு நடைபெற்றது. இதன் மூலம், அம்மாநிலத்தில் ரூ.40 லட்சம் கோடி முதலீடு வரவுள்ளதாகவும், அதன் வழியே 1 கோடி புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

EVA STALIN